# பொன் வித்யாஷ்ரம் பள்ளி

## வகுப்பு: பத்து தமிழ்

## அரையாண்டு பாடப்பகுதி பயிற்சி தாள் -1

**பெயர்:-------------------------**

**வகுப்பு:------------------------**

---

1.**<u>கீழ்வரும் பத்தியை படித்து இதனை தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி:-</u>**

நாம் உண்ணும் உணவை இருபெரும் பிரிவுகளாக பிரிக்கலாம். ஒன்று அமிலத்தை உண்டாக்கும் உணவுகள். இரண்டாவது, காரத்தன்மையை உண்டாக்கும் .உணவுகள் நல்ல ஆரோக்கியத்துக்கு உடல் இரத்தத்தில் அமில கார விகிதம் 20:80 இருக்க வேண்டும். ஆனால் இந்த விகிதத்துக்குத் தலைகீழாக நாம் உண்ணும் உணவில் அமிலத்தன்மை அதிகம். அதிக அமிலத்தைச் சரி செய்ய காரத்தன்மை உள்ள உணவுகள் தேவை. பொதுவாக தானியங்கள், பருப்புகள், கொழுப்புகள் (இறைச்சி, மீன், நெய், எண்ணெய் )மற்றும் டீ காபி போன்றவை அமிலத்தை அதிகமாக்குபவை. காய்கறிகளும் பழங்களும் குடலில் காரத்தன்மையை உண்டாக்கி அமிலத்தைக் குறைக்கின்றன. அதிக அமிலம் முதுமையைச் சீக்கரம் வரவழைக்கின்று. களைப்பு ,வலி, வாயு மற்றும் சரும நோய்கள் ஏற்படுத்துகிறது. தூக்கமின்மை தலைவலி வாந்தி நரம்புத்தளர்ச்சி போன்றவையும் இரத்தத்தில் அசிடிடியை அதிகமாக ஏற்படுகிறது.

**<u>வினாக்கள்</u>**

1.உடலில் ஏற்படும் அதிகப்படியான அமிலத்தன்மையை சரிசெய்ய ---------------------------------------உள்ள உணவுகள் தேவை.

அ.கொழுப்பு ஆ.காரத்தன்மை

இ.புரதம் ஈ.அசிடிடி

2.முதுமையைச் சீக்கரம் வரவழைக்கின்ற தன்மை கொண்ட உணவு வகை----------------------------

அ. அமிலம் ஆ.காரம்

இ.புரதம் ஈ.கொழுப்பு

3.நல்ல ஆரோக்கியத்துக்கு உடல் இரத்தத்தில் இருக்க வேண்டிய அமில

காரத்தன்மையின் விகிதம் என்ன?

அ.**80 : 20** ஆ. **20 : 80**

இ.**30: 80** ஈ. **40 : 80**

4.குடலில் காரத்தன்மையை உண்டாக்கும் உணவுகள் எவை?

அ.காய்கறிகளும் பழங்களும் ஆ.இறைச்சி

இ.டீ காபி ஈ.காரம்

5.தூக்கமின்மை தலைவலி வாந்தி நரம்புத்தளர்ச்சி இவையாவும்

இரத்தத்தில் ----------------------------- அதிகமானால் ஏற்படும்.

அ.கொழுப்பு ஆ.அசிடிடி

இ.அமிலம் ஈ.காரம்

2. <u>கட்டுரை எழுதுக</u>

1. முன்னுரை-தொலைபேசியின் பயன்கள்-கைபேசியின் தோற்றம் -அதன் நவீனத்துவம் அதன் தேவை-தீமைகள்-முடிவுரை.

2. முன்னுரை - நூல்கள் நல்ல நண்பர்கள் -நூல்களின்பயன்கள் - நூல்களின்தேவை-நூலகங்களை பயன்படுத்தும் விதம்-அறிவுப்பசிக்கான

உணவே நூல்கள்- நூல்களை தேர்ந்தெடுக்கும் அறிவு-முடிவுரை.

3. கடிதம்

1. போக்குவரத்து நெரிசல்மிக்க சாலைகளில் திரியும் கால்நடைகளால் ஏற்படும் இடையுறுகளை நீக்க நடவடிக்கை எடுக்கும்படி மாநகராட்சி ஆணையர்க்கு வேண்டுகோள் விடுத்துக்கடிதம் எழுதுக.

2. உன் ஊர் பக்கம் ஏற்பட்ட நில அதிர்ச்சியையும் அதில் உனக்கு

ஏற்பட்ட அனுபவம் குறித்தும் உன் தோழனுக்கு / தோழிக்கு கடிதம் எழுதுக.

<u>1.இலக்கணம்</u>

1. நிரப்புக:-

1. ஒரு சொல் தொடரில் முன்னும் பின்னும் வருகின்ற சொற்கள் உணர்த்தும் குறிப்பால் ஒரு பாலை தவிர்த்து மற்றொரு பாலை சுட்டும் அதற்கு---------------------------- என்று பெயர்.

அ.இனங்குறித்தல் ஆ.ஒன்றொழிப்பொதுச்சொல்

இ.ஒருபொருட்பன்மொழி ஈ.வெளிப்படை

2. மாணவன் ஆசிரியரிடம் வினவும் வினா ----------------------

அ.அறிவினா ஆ.அறியா வினா

இ.கொளல் வினா ஈ.கொடைவினா

3. நெல்லைக்கு வழி யாது ? அது எனில் ----------------------

அ.நேர் விடை ஆ.ஏவல்விடை

இ.சுட்டு விடை ஈ.எதிர்விடை

4. ஒரு பெயர்ச்சொல்லோ வினைச்சொல்லோ இரண்டு மூன்று அல்லுத நான்கு முறை அடுக்கி வருவது----------------------------

அ.இரட்டைகிளவி ஆ.வினைச்சொல்

இ.அடுக்குத்தொடர் ஈ.இனங்குறித்தல்

5. இதனைச் செய்வாயா? “என்றற்கு நீயே செய”˙ எனல்.

அ.எதிர்மறை விடை ஆ.உடன்பாடுவிடை

இ. ஏவல்விடை ஈ. சுட்டு விடை

6. மயில் தோகை விரித்து ஆடியது.

அ. ஒருபொருட்பன்மொழி ஆ.இனங்குறித்தல்

இ. ஒன்றொழிப்பொதுச்சொல் ஈ. உவமஉருபு

7. ஒரு பொருளை கொடுப்பதற்காக வினவுவது ------------------

அ.அறிவினா ஆ.அறியா வினா

இ.கொளல் வினா ஈ.கொடைவினா

8. வினவும் வினாவிற்கு எதிர்மறைப்பொருளில் விடையளிப்பது---------------------------

அ. அ.நேர் விடை ஆ.ஏவல் விடை

இ.சுட்டு விடை ஈ.எதிர்மறை விடை

9. ஒருசொல் தன்பொருளையும் குறித்து தனக்கு இனமான பொருளையும் குறித்து வருவது -----------------------------

அ. ஒருபொருட்பன்மொழி ஆ.இனங்குறித்தல்

இ. ஒன்றொழிப்பொதுச்சொல் ஈ. உவமஉருபு

10. இரட்டித்து நின்று பொருள் தரும் சொற்கள் பிரித்தால் பொருள் தராது ----------------------

அ.இரட்டைகிளவி ஆ.வினைச்சொல்

இ.அடுக்குத்தொடர் ஈ.இனங்குறித்தல்

**<u>2.உதாரணம் தருக</u>**

1.அறி வினா - ----------------------------------------------------

2.அறியா வினா - ------------------------------------------------

3.ஐய வினா - -----------------------------------------------------

4.கொளல் வினா - ----------------------------------------------

5.கொடை வினா - ----------------------------------------------

6.ஏவல் வினா - ----------------------------------------------

7.சுட்டு விடை- --------------------------------------------------

8.மறை விடை- --------------------------------------------------

9.நேர் விடை- -----------------------------------------------------

10.ஏவல் விடை- ---------------------------------------------------

11.வினா எதிர் வினாதல் விடை ------------------------------

12.உற்றதுரைத்தல் விடை -----------------------------------

13.உறுவது கூறுல் விடை -----------------------------------

14.இனமொழி விடை----------------------------------------------

15.ஒருபொருட் பன்மொழி ------------------------------------

16.இனங்குறித்தல் ----------------------------------------------

17.ஒன்றொழி பொதுச்சொல்----------------------------------

18.அடுக்குத்தொடர்---------------------------------------------

19.இரட்டைக்கிளவி-----------------------------------------------

2. **<u>செய்யுட்பகுதி:-</u>**(1.கம்பராமாயணம்   2.நற்றிணை)

1. கம்பர்-சிறுகுறிப்பு தருக.

2.கையுறைப் பொருள்களாகக் குகன்கொண்டு சென்றன எவை? யாருக்கு கொண்டு சென்றான்?

3.குகன் இலக்குவனிடம் யாது கூறினான்?

4.குகனின் வேண்டுகோள் யாது?

5.இளையோன் குறுகி நீ ஆவான் யார்?விளக்குக.

6.சீதை இலக்குவன் ஆகியோரிடம் குகனைப்பற்றி

இராமன் கூறியதென்ன?

7.விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?

8.குகனுக்கும் இராமனுக்கு நடைபெற்ற உரையாடலைத் தொகுத்தெழுதுக.

9.கங்கையின் மறுகரை அடைந்த குகனிடம் இராமன் கூறியதென்ன?

10.கம்பராமாயணம் -சிறுகுறிப்பு தருக.

11.தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணை பாடல் வழித் தொகுத்து எழுதுக.

12.மிளைகிழான் நல்வேட்டனார் -குறிப்பு தருக. 13.நற்றிணை- நூற்குறிப்பு தருக.






<u>3. செய்யுள் திறனறி வினாக்களுக்க விடையளி-</u>

அ. விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அனையானும்

முடுகினன் நெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க

கடிதினில் மடஅன்னக் கதியது செலநின்றார்

இடர்உற  மறையோரும் எரியுறு மெழுகானர்

**<u>வினாக்கள்:-</u>**

1.இப்பாடலின் ஆசிரியர் பெயர் என்ன?

2.இப்பாடல் நும்பாட பகுதியில் எத்தலைப்பின் கீழ் இடம்பெற்றுள்ளது?

3.கடிது-பொருள் தருக.

4.யார் மெழுகானார்?

**<u>3.உரைநடைப்பகுதி</u>:**

<u>1. அண்ணல் அம்பேத்கர் 2.பேச்சுக்கலை</u>



1. அம்பேத்கர் எங்கு எப்பொழுது பிறந்தார்?

2. அம்பேத்கரின் பெற்றோர் யாவர்?

3. அம்பேத்கருக்குப் பீம் என பெயர் வைக்க காரணம் என்ன?

4. பீமாராவ் தம் பெயரை அம்பேத்கர் என மாற்ற காரணம் யாது?

5. அம்பேத்கர் குறித்து நேரு கூறியது யாது?

6. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?

7.கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?

8. அம்பேத்கரின் அரும்பணிகளை குறித்து தொகுத்து எழுதுக.

9. அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?

பேச்சுக்கலை 1.பேச்சின் முக்கூறுகள் யாவை?





2. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?

3. மேடைப்பேச்சின் முடிக்கும் முறைகள் குறித்து சிலவற்றை எழுதுக.

4. மேடைப்பேச்சின் திறம் குறித்துக் குறள் கூறும் செய்திகள் யாவை?












<u>துணைப்பாடப் பகுதி:-</u>

(1.அன்றாட வாழ்வில் சட்டம் 2. அண்ணாவின் கடிதம்)

1. அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்கள் குறித்து கட்டுரை எழுதுக.
2. அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

<u>3.உரைநடைப்பகுதி</u>: 1.திரைப்படக்கலை உருவான கதை



1. மொழி மாற்றம் என்றால் என்ன?
2. கல்விப்படங்களின் வாயிலாக நாம் அறிவன யாவை?
3. திரைபடச்சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை?
4. படப்பிடிப்புக் கருவி குறித்து எழுதுக.

5. திரைப்படக்காட்சி எவ்வாறு பதிவு செய்யப்படுகிறது?

6. கருத்துப்படம் பற்றி விளக்கி எழுதுக.



4. துணைப்பாடப் பகுதி:-

1. பாரத ரத்னா எம்.ஜி.இராமசந்திரன் குறித்து கட்டுரை எழுதுக.

**சுருக்கி வரைக**

தமிழ்த்திரைப்பட உலகின் வழிகாட்டியாகவும் பாதுகாவலராகவும் திகழந்தவர் ஏ.வி.மெய்யப்பர்.அவர் இயற்கையெய்தியதும் **,** அவர் வழக்கமாக பயன்படுத்திய பொருள்கள் எல்லாவற்றையும் பாதுகாப்பாக எடுத்து வைத்தனர்.அத்தகைய பொருள்களில் இன்றியமையாத ஒன்று ஒலிப்பதிவுநாடாக் கருவி. அவர் தமக்கு விருப்பமான பாடல்களை அதில் கேட்பது வழக்கமாம். அவருடைய துணைவியார்

அவ்வொலிப்பதிவுக் கருவியைத் தேடிய போது **,**அதனைக் காணவில்லை **;** எல்லாரையும் கேட்டுப் பார்த்தார் **;** வீட்டில் தேடாத இடமில்லை. ஆனாலும் கிடைக்கவில்லை . சில நாள்களுக்குப் பிறகு**,** அலுவலகத்திலிருந்த ஒருவரைக் கேட்ட போது அவர் கூறிய பதில் அவ்வம்மையாரைப் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியது . ஏ.வி.எம் அவர்கள்

இயற்கை யெய்துவதற்கு நான்கு நாளுக்குமுன் செய்தித்தாளில் ஒரு விளம்பரத்தைப் பார்த்தார் . யாராவது ஓர் ஒலிப்பதிவுக்கருவியை நன்கொடையாகக் கொடுத்து உதவினால் அதில் பாடங்களைப் போட்டுப் படித்துத் தேர்வு எழுத உதவியாக இருக்கும் என்று விழிமாற்றுத்திறனாளிப் பெண்ணொருத்தி விளம்பரப்படுத்தியிருந்தாள்

அதனைப் படித்த ஏ.வி.எம் தம் ஒலிப்பதிவுக் கருவியை எடுத்து**,** அதனை எப்படி இயக்குவது எனத் தாமே ஒலிப்பதிவுநாடாவில் பேசிப் பதிவு செய்தார் .அதனை **,** அந்தப் பெண்ணுக்கு உடனே அனுப்பி வைத்தார். தம் வாழ்நாள் இறுதிவரை ஏ.வி.எம் அவர்கள் கருணை உள்ளத்தோடு இருந்துள்ளார் என்பதை இதன் வாயிலாக அறியமுடிகிறது. நம் வாழ்நாளில் இயன்றவரை இயலாதோர்க்கு மாற்றுத் திறனாளியர்க்கு உதவுவதே சிறந்த உதவி.

பொன் வித்யாஷ்ரம் பள்ளி,

வகுப்பு: பத்து தமிழ்

அரையாண்டு பாடப்பகுதி பயிற்சி தாள் -2

பெயர்:-------------------------

வகுப்பு:-----------------------






**செய்யுட்பகுதி:-**

(1. பெரிய புராணம் 2.புறநானூறு 3.தமிழ் விடு தூது 4.தேவாரம் 5.திருக்குறள் )

1. இப்போது இங்கு அவன் உதவான் -விளக்குக.
2. பெரிய புராணம் -நூற்குறிப்பு.
3. சேக்கிழார் - ஆசிரியர் குறிப்பு தருக.
4. தண்ணீர்ப்பந்தலைக் கண்டு நாவுக்கரசர் வியப்புறக் காரணம் என்ன?
5. திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தலைக் கண்டு வியந்த நிகழ்ச்சியைத்தொகுத்து எழுதுக.
6. அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்தனை விவரிக்க.
7. சான்றோர் நட்பு குறித்து புறநானூறு வழி விளக்குக.
8. புறநானூறு -நூற்குறிப்பு தருக.
9. கண்ணகனார் - ஆசிரியர் குறிப்பு தருக.
10. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?
11. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?

12. வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடு தூது கூறுவன யாவை?

13. வயலின் வரப்புகளாகத் தமிழ்விடு தூது கூறப்படுபவை யாவை?

14. தமிழ் எவ்விதம் செழித்து வளர்ந்ததாகத் தமிழ்விடு தூது கூறுகிறது.

15. பெரியாரைத் துணைகொள்ளாததனால் ஏற்படும் குற்றங்கள் யாது?

16. பெரியாரைத் துணைகொள்வதனால் ஏற்படும் சிறப்புகள் யாவை?

17. பெரியாரது இலக்கணத்தையும் துணையாகக் கொள்வதன் தேவையையும் குறித்து எழுதுக.

18. பொருளின் சிறப்பு குறித்து எழுதுக.

19. பொருளீட்டும் நெறியை விளக்குக.

20. பொருளின் பயனை விளக்குக.

21. தேவாரம் - குறிப்பு தருக

22.திருநாவுக்கரசர் - குறிப்பு தருக

23.இறைவன் திருவடினய வணங்குகின்றவருக்குக் கிடைக்கும்

**நன்மைகள் யாவை?**

1. விடுபட்ட சீர்களை எழுதுக:-

1. செய்க பொருளைச் செறுநர் ---------------------

எ.்.கதனிற் ------------------ தில்.

2. அருளொடு ------------------------- வாராப் பொருளாக்கம்

புல்லார் புரள --------------------

<u>இலக்கணம்</u> (உவம உருபு , புணர்ச்சி ,அகப்பொருள்)

<u>**1. நிரப்புக:-**</u>

1. ஒரு பொருளைச் சிறப்பித்துக் கூற அதனை விட சிறந்த வேறொரு பொருளோடு ஒப்பிடுவது -----------------------------------

அ.ஒருபொருட் பன்மொழி ஆ.உவமித்துக் கூறல்

இ.இனமொழி ஈ.இனங்குறித்தல்

2. சிறப்பிக்கப்படும் பொருள் ------------------------------- எனப்படும்

அ.உவமை ஆ.உவமானம்

இ.உவமேயம் ஈ.உவமஉருபு

3. ஒப்பாகக் காட்டப்படும் பொருள் ------------------------------எனப்படும்

அ.உவமை ஆ.உவமானம்

இ.உவமேயம் ஈ.உவமஉருபு

4. உவமையை -------------------------- என்றும் கூறுவர்

அ.உருவகம் ஆ.உவமானம்

இ.உவமேயம் ஈ.உவமஉருபு

5. உவமை உவமேயம் ஆகிய இரண்டனுக்கு இடையில் வருவது ----------------------- எனப்படும்.

அ.தொகையுவமை ஆ.உவமானம்

இ. உவமஉருபு ஈ.உருவகம்

6. உவமஉருபு வெளிப்படையாக வந்தால் ----------------------------------

அ.தொகையுவமை ஆ.விரியுவமை

இ. இனமொழி ஈ.இனங்குறித்தல்

7. உவமஉருபு மறைந்து வந்தால் ---------------------------------------

அ.தொகையுவமை ஆ.விரியுவமை

இ.இனமொழி ஈ.இனங்குறித்தல்

8. புணர்ச்சி -------------- வகைப்படும்

அ.1 ஆ.2

இ.3 ஈ.4

9. மேற்கு ✚ நாடு என்பது ----------------------

அ.மேற்குநாடு ஆ.மேல்நாடு

இ.மேனநாடு ஈ.மேலைநாடு

10. வடக்கு என்னும் திசைப்பெயரோடு பிற திசைகள் வந்து சேரும்போது ----------------------------------

அ.வருமொழி முதல் கெடும் ஆ.நிலைமொழி முதல் கெடும்

இ.நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும் ஈ.நிலைமொழி ஈறு நீங்கும்

11. கருமை ✚ குழி என்பது---------------- எனும் விதிகளின்படி புணரும்

அ.ஆதி நீடல் , இனமிகல் ஆ.ஈறுபோதல் , இனமிகல்

இ.தன்னொற்றிரட்டல் இடையுகரம் இஆதல் ஈ. ஆதி நீடல் ,ஈறுபோதல்

12. வட்டக்கல் என்பதில் ------------------------ மெய் மிக்கு புணர்ந்துள்ளது.

அ.மெல்லின ஆ.வல்லின இ.இடையின ஈ.உடன்படுமெய்

13. முதுமை ✚ ஊர் என்பது ------------------------- என்ற விதிப்படி மூதூர் எனப் புணர்ந்து.

அ.ஆதி நீடல் ஆ.ஈறு போதல் இ.இனமிகல் ஈ.அடியகரம் ஐயாதல்

14. நிலங்கடந்தான் என்பது ----------------------------

அ.இயல்பு புணர்ச்சி ஆ.இனமிகல்

இ.பண்புப்பெயர் புணர்ச்சி ஈ.மகரமெய் கெடுதல்

15. சிறு பொழுது நண்பகல் ----------------------

அ.2முதல் -6மணி வரை ஆ காலை10 முதல்-2 மணி வரை

இ.காலை6முதல்-10 மணி வரை ஈ. மாலை6 முதல்-இரவு10 மணி வரை

16. நெய்தல் நிலத்திற்குரிய தெய்வம்-----------------

அ.முருகன் ஆ.இந்திரன்

இ.வருணன் ஈ.கொற்றவை

**<u>2. உதாரணம் தருக.</u>**

1. உவமஉருபு –
2. உவமை -
3. உருவகம் -
4. தொகையுவமை -
5. விரியுவமை -

6. இயல்பு புணர்ச்சி -

7. விகாரப் புணர்ச்சி -

8. திசைப்பெயர் புணர்ச்சி -

9. ஈறுபோதல் -

10. ஆதி நீடல்

11. இனமிகல்

12. மகரஈற்றுப் புணர்ச்சி -



**<u>துணைப்பாடப் பகுதி:-</u>**

1. தற்காலத் தொல்லியல் ஆய்வுகள் குறித்து கட்டுரை எழுதுக.

2. குறட்டை ஒலி

**<u>3.உ ரைநடைப்பகுதி:</u>**

(1.தொன்மை தமிழகம் 2.தமிழ் மொழியில் அறிவியல் சிந்தனைகள்)




5. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப்பகுதிகள் யாவை?

6. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

7. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

8. உழவுத்தொழில் குறித்து எழுதுக.

9. விண்ணியல் குறித்துத் திருவாசகம் உரைப்பது யாது.∴

10. மண்ணியல் அறிவு –குறிப்பு எழுதுக.

11. கனிமவியல் அறிவு –குறிப்பு எழுதுக.

12. சித்த மருத்துவம் குறித்த செய்திகளை எழுதுக.

13. அணு பற்றிய கம்பரின் கருத்து யாது?

14. அறுவை மருத்துவம் பற்றித் தமிழிலக்கியம் கூறும் செய்திகள் யாவை?